# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 06 புதன்கிழமை 19.06.2024 கதிர் 278







# வாக்குப் பெட்டிகளைத் தயார் செய்யுங்கள்! ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபரில் நடக்கும்

## அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்புரை

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை தயார் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மாவட்ட அளவில் மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் கீழ் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடைபெறவுள்ளதால் மேற்படி வாக்குப்பெட்டிகளை தயார் நிலையில் வைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. 2







# ஊடகவியலாளரின் இல்லம் மீதான தாக்குதலை கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரின் வீடு மீது தாக்குதல் நடத்தி வாகனங்களுக்குத் தீ மூட்டிய சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி யாழ். நகரில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோயில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது.

இதன்போது வீட்டுக்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் 2

# பொசன் வலயத்திற்கென மேல் மாகாண கல்வி நிதியத்திலிருந்து 45 லட்சம் ரூபா ஆளுநரின் அனுமதியில் வழங்கப்பட்டுள்ளதாம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

எதிர்வரும் பொசன் பண்டிகைக்காக கடவத்தை ராகம வீதியில் பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொசன் வலயத்திற்கு தேவையான செலவிற்காக, மேல் மாகாண கல்வி நிதியத்திலிருந்து 85 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

மேல் மாகாண ஆளுநரின் பரிந்துரையின் பேரிலேயே இந்தத்



தொகை வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ள ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் 2

# இரண்டு அரச வங்கிகளில் 65,000 கோடி ரூபா கடனைப்பெற்ற அரசியல்வாதிகளின் நண்பர்கள் திருப்பிச் செலுத்தவில்லை!

## பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவிப்பு

முன்னாள் மற்றும் இந்நாள் அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகளுக்கு நெருக்கமான தொழிலதிபர்கள் 10 பேர், இரண்டு அரசவங்கிகளிடமிருந்து பெற்ற 65,000 கோடி ரூபா கடனை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சாதாரண மக்கள் வங்கியில் கடன் பெற முடியாத நிலைக்கு வங்கிகள் தள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், வரிச்சுமையால் மக்கள் கடும் நிதி சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில், இன்னும் இரண்டு புதிய வகை வரிகள் மூலம் அரச வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க இது குறித்து தெரிவிக்கையில், பலம்



வாய்ந்த அமைச்சர்கள் உட்பட பத்து முக்கிய வர்த்தகர்கள் இரண்டு அரச வங்கிகளிலும் 65,000 கோடி ரூபாய் கடனை பெற்று அவற்றை திரும்பிச் செலுத்தாமல் உள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

இரண்டு அரச வங்கிகளிலும் 65,000 கோடி ஷரூபா கடனை பெற்று திருப்பி செலுத்தாத அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நண்பர்கள் 2

# வாகனப் புகை பரீட்சிப்பு நிலையங்களில் காப்புறுதி சான்றிதழுடன் வருவாய் உரிமமும் வழங்கத் திட்டம்

## வாகனப் புகை பரீட்சிப்பு நிதியப் பணிப்பாளர் தெரிவிப்பு

எதிர்காலத்தில் வாகனப் புகை பரீட்சிப்பு நிலையங்களில் காப்புறுதி சான்றிதழுடன் வருவாய் உரிமத்தையும் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாகன புகை பரீட்சிப்பு சான்றிதழ் வழங்கப்படும் அதேவேளை, ஏனைய சான்றிதழ்களையும் வழங்கும் திட்டத்தின் படி முதல் கட்டமாக மூன்றாம் தரப்பு காப்புறுதி சான்றிதழ் வழங்கும் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும் என வாகனப் புகை பரீட்சிப்பு அறக்கட்டளை நிதியத்தின் பணிப்பாளர் தசுன் ஜனக்க தெரிவித்துள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான வாகனங்களின் காப்பீடானது மூன்றாம் தரப்பாக இருப்பது தெரியவந்துள்ளதாகவும்,



தற்போது, நாடு முழுவதும் 13 காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளதுடன், அவற்றில் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் அதிக எண்ணிக்கையில் மூன்றாம் தரப்பு காப்பீட்டையே கொண்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2

## இரண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்து நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் பல தடவைகள் கேள்வி எழுப்பிய போதும் உரிய பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சேனநாயக்கா மேலும் தெரிவிக்கையில், சிலர் கடன் பெற்று இருபது வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் கடனை திருப்பிச் செலுத்தாமல் பல்வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இதில் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு அரச வங்கிகளிலும் நாட்டின் சாதாரண மக்கள் வைப்புச் செய்த பணமே உள்ளன, இப்படி அரசியல்வாதிகளின் நண்பர்கள் கடனை திருப்பிச் செலுத்தாத போது அது வங்கிகளுக்கு தாங்க முடியாத சுமையை ஏற்படுத்தி விடுகின்றது. இதன் காரணமாக அப்பாவி சாமானியர்கள் வங்கிக்கு சென்று சிறு கடன் தொகையை கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்றார். (ரென-58)

## பொசன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜோசப் ஸ்டாலின், இதேபோல் கடந்த வெசாக் காலத்திலும் கல்வி நிதியத்திலிருந்து இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு 40 இலட்சம் ரூபா வழங்கப்பட்டதாகவும் இவ்வாறு நிதியை வழங்குவதற்கு இதுவொன்றும் ஆளுநரின் சொத்து அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் அநேகமான பாடசாலைகளை நடத்துவதற்கு போதிய வசதிகள் இல்லாத நிலையில், மாணவர்களுக்கு பாதணி வாங்குவதற்கோ, உண்பதற்கு உணவோ இல்லாமல் தவிக்கின்ற இன்றைய நாளில் இவ்வாறு அந்த நிதியை வெசாக் - பொசன் வலயங்களுக்கென அரசியல்வாதிகளுக்கு வழங்குவது பெரும் அநீதியாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரென-60)

## ஊடகவியலாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் ஓட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்தும் கொளுத்தப்பட்டன.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், நீதியான விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும் எனக் கோரியுமே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, தாக்குதல் சம்பவம் தொடர்பில், அச்சுவேலி, மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த மூவரை அச்சுவேலி பொலிஸார் நேற்று கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## வாக்குப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், ஏற்கனவே நடைபெற்ற தேர்தல்களில் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த வாக்குப் பெட்டிகளை அரச தொழிற்சாலைக்கு அனுப்பி அவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்கள் குறித்த விபரங்களைப் பெற்ற பின்னர், வாக்குப்பெட்டிகளில் குறைபாடுகள் இருந்தால், அவற்றை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்கு தேவையான அலுவலர்களின் கணக்கெடுப்பு விரைவில் நடைபெறவுள்ளதுடன், அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையிலான காலப்பகுதியில் நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரென-57)

## வாகனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், இந்த யோசனை போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிடம் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-59)

# ஜெய்சங்கர் நாளை இலங்கை விஜயம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை இலங்கை வருகின்றார் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இலங்கை விஜயத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இருதரப்பு பங்குடைமையின் பரந்தளவான விடயங்கள் குறித்து இலங்கை தலைமைத்துவத்துடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புதிய அரசின் கீழ் வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் முதலாவது இரு தரப்பு விஜயம் இதுவாகும்.

இந்தியாவின் அயல்நாடுகளுக்கு முன்னுரிமைக் கொள்கையை மீள வலியுறுத்தும் இந்த விஜயமானது, கடல் மார்க்கமாக மிகவும் நெருக்கமான அயல் நாடாகவும் காலங்காலமாக நல்லுறவைக்கொண்ட நண்பனாகவும் உள்ள இலங்கைக்கு இந்தியாவினது தொடர்ச்சியான அர்ப்பணிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

அத்துடன், இணைப்புத் திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பரஸ்பர நன்மையளிக்கும் ஏனைய ஒத்துழைப்புகள் ஆகியவற்றுக்கும் இந்த விஜயம் மேலும் உத்வேகமளிக்கும் - என்றுள்ளது. (05)



# தியாகத் திருநாளை ஒட்டிய சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு

இஸ்லாமியர்களின் தியாகத் திருநாளை சிறப்பிக்கும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்று கூடல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ரதிலட்சுமி மண்டபத்தில் இன்று காலை இடம்பெற்றது.

கலாசாலை இஸ்லாமிய மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வை.பர்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகத்திருநாள் பற்றிய விளக்க உரையை இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி மு.அ.அஸ்மிலா பேகம் ஆற்றினார்.

பெருநாள் குறித்த கவிதையை இரண்டாம் வருட ஆங்கில நெறியை சேர்ந்த ஆசிரிய மாணவி ச.பார்த்திமா றிஸ்றினா வழங்கினார். இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி எம் ஐ எப் சப்னா இஸ்லாமிய கீதங்கள் இசைத்தார்.

இஸ்லாமிய மன்றக் காப்பாளர் திருமதி சர்மிளா பாஸ்கரன் நிகழ்வில் ஆசியுரை வழங்கினார். விரிவுரையாளர் வே.சேந்தன் இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சமூக விஞ்ஞானப் பார்வை எனும் பொருளில் உரையாற்றினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

# பாம்பு தீண்டி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் பாம்பு தீண்டி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த ஐயாத்துரை செல்வமகிந்தன் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மாடு கட்டச் சென்றபோது புடையன் பாம்பு தீண்டியுள்ளது.

அதையடுத்து அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (05)

# புனரமைப்புக் காரணமாக வீதித்தடை யாழ் மாநகர சபை விடுத்த அறிவிப்பு!

கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கூடல் அமைப்பின் அடையாள வளைவு அமைத்தல் வேலை இடம்பெற இருக்கின்றது.

இதற்கமைய இன்று ஜூன் 19 ஆம் திகதி முதல் ஜூலை 3ஆம் திகதி வரையான இருவார காலத்திற்கு கோவில் வீதியினை மூடவுள்ளதாக யாழ் மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த வீதிகயைப் பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப்பாதையினை பயன்படுத்துமாறு யாழ். மாநகர சபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (06)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மருதமுனை நாணலின் ஹஜ்ஜுப் பெருநாள் "குக் வித் நாணல்" சமையல் போட்டி நிகழ்வு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த "குக் வித் நாணல்" எனும் சமையல் போட்டி நிகழ்வு நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவி ஏ.ஆர்.பாத்திமா சூபா தலைமையில் புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் அண்மையில் (15) நடைபெற்றது.

இதில் சிரேஷ்ட கவிஞரும் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஆலோசகருமான எம்.எம்.நௌபல் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக அதிபர் ஏ.முஹம்மட் அன்சார், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், கலாநிதி. தல்ஹா சீனி முஹம்மட் ஆகியோரும், தொழிலதிபர்கள், இலக்கிய ஆளுமைகள், கவிஞர்கள், ஆசிரியர்கள், நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் தமிழ் பாடல்களை இசை ஆசிரியர் எம்.ஜெம்சித், எம்.என்.சற்.றூமி, சிங்களப்பாடலை ஆசிரியர் கப்டன் எம்.ஐ.எம். சுல்பிகார் ஆகியோரும், நகைச்சுவை நாடகத்தினை ஊடகவியலாளர் நிஸா இஸ்மாயில், ஏ.அஹ்னா, எம்.ஐ.சம்ஹா ஆகியோரு வழங்கினர்.

கவிதை வாசிப்புகளை நாணல்கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களான மூத்த கவிதாயினி மாஜிதா தௌபீக், சிபானா அஸீம், எஸ்.அக்கீலா பானு, பதுர் நிஸா ஆகியோரும், நாட்டார் பாடலொன்றை கலை இலக்கிய வட்டத்தின் தலைவி கவிதாயினி ஏ.ஆர். பாத்திமா சூபாவும் வழங்க, கேள்வி - பதில் நிகழ்ச்சியை ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸ் நடத்தினார். நிகழ்ச்சிகளை சிரேஷ்ட ஊடகவியலாளர், அறிவிப்பாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார். நாணல் கலை இலக்கிய வட்டத்தினால் நடாத்தப்பட்ட சமையல் போட்டியில் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் மூவர் கலந்து கொண்டதில் பதுர்நிஸா முதலிடத்தை பெற்றமைக்காக ஓய்வுபெற்ற மனையியல் பாட ஆசிரியர் ஏ.எஸ். உம்முல் பாரியா அவர்களினால் கிரீடம் அணிவிக்கப்பட்டு பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுக்கொண்ட எச்.எம்.நூர்சிபா, எம்.ஐ.ஜீஸான் பேகம் ஆகிய இருவருக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.




# மிதி வெடி



யாழ்ப்பாணத்துக்கு அடுத்த அரசாங்க அதிபர் ஆர்? இது தான் இப்ப பரபரப்பாகப் பேசப்படுகிற விசியம் பாருங்கோ..

மற்ற, மற்ற இடங்களில எல்லாம் பதவியில இருக்கிறவர் போறத்துக்கு முன்னமே புதுசா ஒராளைப் போட்டுடுவினம். ஆனா இங்க மட்டும் இருந்தவர் போய் மாசக்கணக்காப் போச்சு, இன்னும் ஒருத்தரும் கிடைக்கேல்லையாம்..

என்னத்துக்குக் கிடைக்கேல்லையாம்..? நீங்கள் சரியாத் தான் யோசிக்கிறியள்.. தங்களுக்கேத்த மாதிரித் தாளம் போடுறதுக்குப் பொருத்தமான ஒருத்தர் கிடைக்கேல்லையாம்.

இளைப்பாறிப் போன மனுசனோட நல்லாப் பாடம் படிச்சிருக்கினம். அதிகாரத்தில ஆர் இருந்தாலும் தங்களுக்குத் "தீபம்" ஏற்றி ஆராதனை செய்யுற ஆளை மேலதிகமாக வைச்சுக் கொண்டு "நல்லா" நடத்தினவை. மக்கள் சேவை தான் மகேசன் சேவை எண்டு சொல்லிக் கொண்டு பதவிக்கு வந்தவரைத் "தீபம்" ஏத்தி சமாதானப்படுத்திப் போட்டு தங்கட எண்ணத்துக்கு அரிசி, பருப்பில இருந்து பெற்றோல், மண்ணெய் எல்லாம் இஷ்டத்துக்கு விளையாடினவை..

அந்தாள் போனதும் கொஞ்சக் காலத்துக்கெண்டு வந்தவரை ஒண்டும் செய்யேலாமல் போச்சு. அம்பலத்தார், சிவபாலன் எண்டு "தீபம்" ஏத்தித் துதிபாடித் தான் பாத்தவை. சுந்தரத்தார் அடம் பிடிச்சு நிண்டுட்டார். யாரும் அம்பலத்திலஆட்டேலாமல் போச்சுது. பல்லைக் கடிச்சுக் கொண்டு இருந்தவை, இப்ப அவரும் போனாப் பிறகு தகுதியான கனபேர் இருந்தும், ஒருத்தருக்கும் குடுக்க விடுகினமில்லையாம். தாங்கள் ஏத்தி விட்ட "தீபம்" அடுத்த எலெக்சன் வரையும் அதிகாரத்தில இருந்தால் தான் நலத்திட்டங்கள் எல்லாம் நாங்கள் செய்யுறமாதிரிக் காட்டிக் கொள்ளலாம். மற்றவனைக் கிட்ட விடாமல் பா(கா)த்துக் கொள்ளலாம் எண்டு கேடியர் திட்டம் போட்டிருக்கிறாராம்.

"அக்டிங்" மேயாத தறை இல்லயாம் பாருங்கோ. இருந்த இடமெல்லாத்திலையும் ஒரே குளறுபடியாம் "பேர்சனல் பைஃல் பேர்பெக்ற்"றா இல்லாத படியால அவரை நிரந்தரமாக்கிறது கஷ்டம் போல இருக்குதாம்.. கேடியருக்கு சலாம் போடக் கூடிய மற்ற ஆக்களும் சொல்லிக் கொள்ளுற மாதிரி இல்லயாம். வடமராட்சி எண்டால் மண்ணாலையும், வன்னி எண்டால் மரத்தாலையும் நல்ல வரும்படி பாத்தவை தான் நிக்கினமாம்.

ஒரு சோலியும் இல்லாத - ஒருத்தருக்கும் குனிஞ்சு நிண்டு கும்பிடு போடாத ஒராளிண்ட பேர் தான் இப்ப அங்க அடிபடுகுதாம். அந்தாள் இப்ப மாகாண அமைச்சொண்டில செயலாளரா இருக்கிறாராம். அரச நிர்வாக சேவைக்கும் போட்டிப் பரீட்சையில திறமை அடிப்படையில தான் தெரிவாகினவராம்.

ஆனால் ஆளுக்கு சனி வக்கிர பெயர்ச்சி நல்லதுக்கில்லை போல? அவர் கிரகங்களில நம்பிக்கை இல்லாத ஆளா இருந்தாலும், அதே அமைச்சில முந்திச் செயலாளரா இருந்த "இளவரசர்" ஒருவர் தான் அவருக்கு ஆப்பிறுக்கி இருக்கிறார் எண்டு கதை...!

முந்தின செயலாளருக்கும், அதிகார அம்மணிக்கும் கடும் புடுங்குப்பாடாம். அம்மணி அதிகாரத்துக்கு வந்ததும், "இளவரசரை" இங்க இருந்து அப்புறப்படுத்துறதில குறியா நிண்டு நாட்டை ஆளுற தலைவரிண்ட அலுவலகத்துக்கு அனுப்பினவவாம்.

இளம் அரசர்(கோ) அங்க இருந்து ஒரு மாதிரி மீண்டும் மாகாணத்துக்கு வந்திட்டாராம். வந்த நாளில இருந்து வருங்கால அரசாங்க அதிபருக்குக் குடைச்சல் மேல குடைச்சல் குடுத்துக் கொண்டிருக்கிறாராம். நிறைஞ்ச மனம் கொண்டவரோட தனிப்பட்ட பிரச்சினை எண்டு எதுவுமில்லை. ஆனால் அவர் அதிகார அம்மணிக்குச் செல்லப்பிள்ளை எண்டது தானாம் இவருக்குப் பிரச்சினை.

அதிகார அம்மணிக்கு அலுப்புக் குடுக்கேக்க பக்கத்தில நிக்கிற வைக்கும் படத்தானே செய்யும்? தனக்கு நெருக்கமான சில பத்திரிகைக்காரரைக் கைக்குள்ள வைச்சுக் கொண்டு வருங்கால அரச அதிபரிண்ட இப்போதைய அமைச்சு அதிகாரிகளை அவமானப்படுத்திற வேலையில இறங்கி இருக்கிறாராம்.

ஒரு கல்லில ரெண்டு மாங்காய் அடிக்கப் பார்க்கிறார் அந்த இளவரசர். மாகாண அமைச்சை அடிச்சால், அதிகார அம்மணிக்கும் அலுப்பு. அதே நேரத்தில கே(தா)டியருக்கு நெருக்கமான அல்லக்கைகளைக் கலைச்சுப்போட்டு நேர்மையான வழியில வரக் கூடிய அரசாங்க அதிபரையும் வராமல் பண்ணினதாயும் இருக்கும் தானே?

எப்பிடி எல்லாம் யோசிக்கினம் பாருங்கோ..!

நரமுனி

# எழுத்துப் பிழைகள் எங்கே வரும்?

## அறிந்துகொண்டால் தவிர்க்கலாம்!

கவிஞர் மகுடேசுவரன்
பதிவிலிருந்து





**நெடில் எழுத்து இடவேண்டிய இடத்தில் குறில் எழுத்து இடுவது. இதுதான் அடிக்கடி நடக்கும். வீடு என்பதனை விடு என்றோ, கோடை என்பதனைக் கொடை என்றோ எழுதுவது. மொழியை நன்கு கற்று எழுதுவதன் வழியாகத்தான் இப்பிழைகளிலிருந்து தப்பிக்க முடியும். இல்லையேல் எங்காவது இப்பிழைகள் தோன்றி வெட்கமுறச் செய்துவிடும்.**

தமிழில் எழுதும் பலர்க்கும் எழுத்துப் பிழைகள் எங்காவது நேர்ந்துவிடும். நாம் செய்யும் எழுத்துப் பிழைகளில் தலையாயவை ஒரே ஒலிப்பில் இருக்கக கூடிய எழுத்துகளில் பிழை செய்வதுதான்.

ஒரே ஒலிப்பில் இருக்கக்கூடிய எழுத்துகளில் பெரும்பான்மையானவை குறிலும் நெடிலும் ஆகும். அ ஆ – இ ஈ – க கா – வி வீ என உள்ள குறில் நெடில் எழுத்துகள் ஒலிப்போசையில் ஒன்றேபோல் இருப பவை. ஒலிக்கும் கால அளவில்தான் மாத்திரை வேறுபாடு. அதனை விளங்கிக்கொள்ளாமல் அல்லது குறில் நெடில் கவனமின்றித் தவறாக எழுதிவிடுவோம்.

அவற்றில் ஒன்று – நெடில் எழுத்து இடவேண்டிய இடத்தில் குறில் எழுத்து இடுவது. இதுதான் அடிக்கடி நடக்கும். வீடு என்பதனை விடு என்றோ, கோடை என்பதனைக் கொடை என்றோ எழுதுவது. மொழியை நன்கு கற்று எழுதுவதன் வழியாகத்தான் இப்பிழைகளிலிருந்து தப்பிக்க முடியும். இல்லையேல் எங்காவது இப்பிழைகள் தோன்றி வெட்கமுறச் செய்துவிடும்.

அறியாமையால் நேரும் பிழைகள் ஒரு பக்கம் இருப்பினும் நம்மையறியாமல் கவனக் குறைவாகவும் சில பிழைகளைச் செய்துவிடுவோம். அவை எவ்வழியில் நேரும் என்று பார்ப்போம்.

(1). ஆகார நெடில் எழுத்துகளுக்குத் துணைக்கால் இடவேண்டும்.







அவ்வெழுத்துகள் தோன்றும் சொற்களுக்கிடையே நெடில் எழுத்துகள் வருகையில் துணைக்கால் போட மறந்துவிடுவோம்.

வாழாமல் என்பதனை வாழமல் என்று எழுதிவிடுவோம். காற்றாலை – காற்றலை, பூச்சாண்டி –பூச்சண்டி என்று இவ்வகையில் நிறையவே பிழைகள் வரும்.

(2). இகர நெடில்களில் மேல்விலங்குச் சுழியிட மறந்துவிடுவோம். கீற்று, வீழ்ச்சி, ஜூன் போன்ற சொற்களைக் கிற்று, விழ்ச்சி, ஜ/ன் என்று பிழையாக எழுத நேரும்.

(3). உகர நெடில்களில் பல எழுத்துகளுக்குக் கீழ் விலங்குச் சுழிப்புத்தான் வேறுபாடு. மு, மூ ஆகிய குறில் நெடில் எழுத்துகளிடையே என்ன வேறுபாடு ? ஈற்றில் வரும் சுழிதான். அதனைச் சுழிக்க மறந்துவிட்டால் எழுத்துப் பிழையாகிவிடும். மூன்று முன்று – பேஷரூர் பேருர் – உள்ளூார் உள்ளுர் எனப் பிழைகள் வரும்.

(4). எகர வரிசை நெடில்களில் ஒற்றைக் கொம்புக்கும் இரட்டைக் கொம்புக்கும் வேறுபாடு மறந்து எழுதிவிடுவது. கேள்வி கெள்வி – சேறு செறு – தேன் தென் என்று பிழையிழைப்பதைப் பார்க்கலாம்.

(5). ஒகர வரிசை நெடில்களில் மேற்சொன்ன இரட்டைக்கொம்பு மறத்தலும் துணைக்கால் இட மறத்தலும் பிழைவரக் காரணமாகின்றன. கோட்டை என்பதனைக் கொட்டை என எழுதிவிடுவார்கள். சோறு சொறு– தோட்டம் தேட்டம் எனப் பிழை செய்வார்கள்.

குறில் எழுத்து வரவேண்டிய இடத்தில் நெடில் எழுத்து இடுகின்ற பிழைகள் குறைவாகத்தான் இருக்கும். பாடல் என்பதைத்தான் படல் என்று எழுதிப் பிழையிழைப்பார்களே தவிர, பஞ்சு என்பதனைப் பாஞ்சு என்று எழுதுவது குறைவுதான்.

இம்முறைகளில்தான் எழுத்துப் பிழை நேரும் என்பது தெரிந்துவிட்டால் அவற்றில் கூடுதல் கூர்மையோடு இருப்போம். அப்பிழைகளை எளிதில் தவிர்த்து விடலாம்.



# கோட்ட மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் கார்மல் பற்றிமா தேசியக் கல்லூரி அபாரம்!





(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை கோட்ட மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி 42 முதல் இடங்களினையும், 27 இரண்டாம் இடங்களினையும், 3 மூன்றாம் இடங்களினையும் பெற்று கல்முனை வலய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளது. கல்முனை வலய மட்டத்தில் இடம்பெற்ற குழு விளையாட்டுக்களில் வலைப்பந்தாட்டப் போட்டியில் 16 வயதுக்குட்பட்ட மற்றும் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் அணியினர் முதல் இடத்தினையும், பெண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று கிழக்கு மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

# காட்டுப் பாதை 30 ஆம் திகதி திறக்கப்படும்! அம்பாறை அரச அதிபர் உறுதியளித்தார்

(வி.ரி.சகாதேவராஜா)

"கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும். அதனைத் திறந்து வைக்க கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் வருகை தரவிருக்கிறார்" என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தன்னைச் சந்தித்த ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினரிடம் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பு நேற்று (18) செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மு.வடிவேல், செயலாளர் எஸா.செல்வானந்தன், பொருளாளர் இ.ஜெகநாதன்(குமார்) உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். அதன் போது குறித்த குழுவினர் பத்து நாட்களுக்கு முன்னரே, அதாவது 25 ஆம் திகதி காட்டுப் பாதை திறக்கப்பட வேண்டும், எனக் கோரிக்கை விடுத்தனர்.



அதற்குப் பதிலளித்த அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, மேற்படி காட்டுப்பாதையானது 30 ஆம் திகதி திறக்கப்படும் என்றும் இதன்போது ஆளுநர் அங்கு வருகை தருவார் என்றும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜனையும் குழுவினர் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இதேவேளை கதிர்காமப் பாதயாத்திரைப்பான காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையைக் கண்டித்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்று (18) காலை 10.45 மணியளவில் கவனயீர்ப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.




# மின் கட்டணங்கள் மீண்டும் குறையவுள்ளன! பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தகவல்

*2024 ஆண்டின் இரண்டாவது மின் கட்டணத் திருத்தம் ஜூலை 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ நேற்று தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் எழுத்து மூலமான கருத்துக்கள் ஜூலை 8 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் வாய் மூலமான கருத்துக்கள் பெறுதல் ஜூலை 9 ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்தக் கட்டணத் திருத்தத்தில் மின் கட்டணம் குறைக்கப்பட உள்ளதுடன், அதன்படி குறைக்கப்பட்ட சதவீதங்கள் ஜூலை 15 ஆம் தேதி அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

# அரசு எங்களை சாகும் வரையான உண்ணாவிரதத்துக்கு நகர்த்துகிறது!

## தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்கத்தின் செயலாளர் முகமது காமில்

(நூருல் ஹுதா உமர்)

"நியாயமான மற்றும் எங்களுக்கு வழங்குவதாக அரசால்வாக்குறுதியளிக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை நிவர்த்திக்குமாறு கோரி நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த 50 நாட்களாக போராடிவரும் இன்றைய சூழலில் அரசும் சம்மந்தப்பட்ட நிருவாகிகளும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது எங்களை சாகும் வரையான உண்ணாவிரதத்துக்குள் தள்ள எத்தனிப்பது போன்று உள்ளது!" என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமில் தெரிவித்தார். நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 50 நாட்களாக போராடி வரும் நிலையில், தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இன்று சுழற்சி முறையான உண்ணாவிரத, சத்தியாக்கிரக போராட்டத்தை பல்கலைக்கழக நுழைவாயிலில் ஆரம்பித்துள்ளனர்.

சுழற்சி முறையான உண்ணாவிரதப் போராட்டத்தில் முதற்கட்டமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன், எஸ். றிபாயுத்தீன், எம்.எச்.எம். நாஸார் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் முகமது காமில், நாங்கள் சொகுசுத் தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான கோரிக்கைக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஊழியர்களின் போராட்டம் காரணமாக பல்கலைக்கழகங்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. இதனால் மாணவர்களின் கல்விநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவைகள் தொடர்பில் அரசாங்கமோ அல்லது மாணவர்களோ கவலைப்பட்டதாக தெரியவில்லை. அவ்வாறு அவர்கள் கவலைப்பட்டிருந்தால்எங்களது நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் கருத்துக்களையாவது வெளியிட்டிருப்பர்.

ஊழியர்கள் போராடிவரும் சூழலில், குறித்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். எங்களுக்கு சாதகமான பதில் கிடைக்குமாக இருந்தால் உடனடியாக கடமைக்கு திரும்ப தயாராய் இருக்கிறோம். இல்லையெனில்நாங்கள்சாகும்வரையான உண்ணாவிரத போராட்டத்தை நோக்கியே நகரவேண்டியுள்ளது, எனத் தெரிவித்தார்.

# திருமலை மத்திய சந்தை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை மத்திய சந்தை கட்டடத் தொகுதி வியாபாரிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி திருகோணமலை நகர சபை வளாகம் வரை சென்றது.

தங்கள் வியாபாரத்தைச் சுதந்திரமாக மேற்கொள்ள இடமளிக்குமாறும், வீதி வியாபார நடவடிக்கைகளைத் தடை செய்யுமாறு கோரியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

"திருகோணமலை நகர சபைக்கு மாதக் கட்டணம் செலுத்தி வருகின்றோம். ஆனால். வீதியோர வியாபாரிகளை அனுமதித்து விற்பனை நடவடிக்கையை மேற்கொள்வதனால்எங்கள்வியாபாரம் பாதிக்கப்படுகின்றது." – என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திருகோணமலை மத்திய சந்தை கட்டடத் தொகுதி வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

திருகோணமலை நகர சபை செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் இதன்போது அவர்கள் கையளித்தனர்.

நூற்றுக்கணக்கான வியாபாரிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். இதனால்வியாபார நடவடிக்கைகள் ஒரு சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தன. (05)










## மாவடிப்பள்ளி கலாசார மண்டப நிர்மாண வேலைகள் ஆரம்பம்

(எம்.எம்.றம்ஸீன்)

அம்பாறை மாவட்ட மாவடிப்பள்ளி கலாச்சார மண்டப நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவடிப்பள்ளி பெரிய பள்ளிவாசலின் வேண்டுகோளுக்கிணங்க, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை மற்றும் காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, மாவடிப்பள்ளி கலாச்சார மண்டப நிர்மாணத்துக்கு ஐந்து மில்லியன் ஷரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த கட்டிட வேலைக்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கலாசார மண்டப நிர்மாண வேலைத் திட்டதினை ஆரம்பித்து வைத்தார்

பள்ளிவாசல் தலைவர் முனாப், செயலாளர் பௌமி, மௌலவி பாரிஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் அஷாம் அப்துல் அஸீஸ், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் ஏ.எம்.ஜாஹிர், நாடாளுமன்ற உறுப்பினரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் வை.எல். எம்.நியாஸ், மாவடிப்பள்ளி விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், ஊர் முக்கியஸ்தகர்கள் பொது மக்கள், நலன் விரும்பிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பாலமுனை கிராமத்தில் சகவாழ்வுச் சங்கம் ஆரம்பம்





(எம்.எ.நவாஸ்)

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினால்கிராமங்கள் தோறும் சகவாழ்வுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிஎம்.இர்பானின் வழிகாட்டலில், உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் (சட்டத்தரணி) ஆலோசனையில், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏஎம்எம்.றிஸான் நெறிப்படுத்தலில், பாலமுனை (திராய்க்கேணி) பிரிவுக்கான சகவாழ்வுச்சங்கம் நேற்று ஆரம்பிக்கப்பட்டு நிருவாகத் தெரிவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிராமசேவகர் எம்எஸ்எம்.இப்றாஹிம் மற்றும் கிராம மக்கள் பங்கேற்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2024இல் வெளியிடப்பெற்றது.